2004 ஜூலை 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

7—

அன்னதானத் திட்டம்

***37395–திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலில் இலவச அன்னதானத் திட்டம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலின் வருவாய், திருக்கோயிலின் நிர்வாகச் செலவினங்களுக்கே ஈடு செய்யக்கூடிய நிலையில் உள்ளதால், இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினை தற்சமயம் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கு இடமே இல்லை என்று பொன்னான ஆட்சி செய்து கொண்டிருக்கிற இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இன்றைக்கு நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பல்வேறு சலுகைகளை அள்ளித் தருகின்ற அரசாக விளங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினால் உடனடியாக இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியாவிட்டாலும் எதிர்வரும் காலங்களில் மீண்டும் பரிசீலனை செய்து, நிதி வசதி இல்லாவிட்டாலும்கூட நிதி வசதி அதிகம் உள்ள திருக்கோயிலிலிருந்து உபரி நிதியைப் பெற்று இந்தத் திட்டத்தை தும்பூர் நாகம்மன் கோயிலில் அமல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 26

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலில் 63 ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கினார்கள். தற்சமயம் 171 ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்த ஆலயத்திலேயும் அந்தப் பகுதியினுடைய மக்கள் மூலம் வருவாயைப் பெருக்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முன்வருவார்களேயானால் நிதிநிலைக்கேற்ப அன்னதானத் திட்டத்தைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 8, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

8—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம்

***35921—திருமதி வி. அழகம்மாள்—**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, அந்த இடத்திலேயே புதிய கட்டடம் கட்டுவதற்கு நபார்டு நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்தவுடன் புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.